**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 441/2014** **நாள்.23.10.2025**

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ம் நாள் மனுதாரர் தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வசுபால நைனார் | சாதி | |
| கிராமம் | வீடுர் | மதம் | இந்து |
| வட்டம் | திண்டிவனம் | வயது | 62 |

**ம.சா.1**

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய மகன் ரவி என்பவர் தான் விபத்தில் இறந்தார். 1-ம் மனுதாரர் ஜெயந்தி என் மனைவி. விபத்தின் போது ரவிக்கு திருமணம் ஆகவில்லை. ரவி பாலிடெக்னிக் படித்துள்ளார். அதை காட்டும் ஆவணம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேலை சம்பந்தமாக மட்டும் தாக்கல் செய்துள்ளேன். ரவியின் வயது தொடர்பான ஆவணம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரவியின் வருமானம் தொடர்பான ஆவணம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். 18.08.2014 அன்று விழுப்புரத்திலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் செண்டுர் அருகே விபத்து நடந்தது. விபத்து குறித்து தொலைப்பேசியில் தகவல் வந்ததன் அடிப்படையில் முண்டியம்பாக்கம் மருத்துவமனை சென்று பார்த்தேன். அன்றே ஜிப்மர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எங்கள் ஊரை சேர்ந்த ரமேஷ் என்பவர் புகார் கொடுத்தார். அவரும் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ரவி ஓட்ட பின்னால் இன்னொருவர் வசந்தராஜ் என்பவர் அமர்ந்து சென்றுள்ளார்கள். புகார் கொடுத்த ரமேஷ் வசந்தராஜின் தந்தை. வசந்தராஜும் விபத்தில் இறந்து விட்டார். காலை 5.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள் விபத்து நடந்தது. விபத்து நிகழ்ந்த விதம் குறித்து நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. ரவி ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் வசந்தராஜாவுக்கு சொந்தமானது. ரவியின் ஓட்டுநர் உரிமம் எதுவும்

வழக்கில் தாக்கல் செய்யவில்லை. முதல் விசாரணையில் ரவி ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த லாரியில் உடன்இருந்த டிரெய்லர் மோதி தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. என் மகன் லாரி முந்தி சென்றபோது பின்னால் வந்த டிரெய்லரை கவனிக்காமல் ரோட்டில் ஏறி அதில் மாட்டி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் என் மகன் டிரெய்லரில் அடிப்பட்டு இறந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் லாரியின் காப்பீட்டு நிறுவனத்தின் மீது மட்டும் மனுதாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பின்னிட்டு 2-ம் எதிர்மனுதாரர் ஆட்சேபணையை தாக்கல் செய்ததன் அடிப்படையில் 3, 4 எதிர்மனுதாரர்களை மனுவில் சேர்த்தோம் என்றால் சரிதான். ரவி மற்றும் வசந்தராஜா ஆகியோர் டிரெய்லரில் சிக்கி தான் விபத்தில் இறந்துள்ளார்கள் என்றால் சரிதான். எனவே எனக்கு இழப்பீடு வழங்கவேண்டி இருந்தால் 3,4 எதிர்மனுதாரர்கள் தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. ரவி மற்றும் வசந்தராஜா ஆகியோர் விபத்தின் போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் கையில் எடுத்து சென்றார்கள். என் மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட உரிமம் இல்லை என்றாலும் அவர் வாகனத்தை ஓட்டதெரியாமல் இயக்கி விபத்திற்கு காரணம் ஆகியுள்ளார் என்றாலும் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது கவனக்குறைவு இல்லை என்றாலும் எனவே 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதீதமானது என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.